மலர்-9 FEBRUARY -1996 இதழ்- 2

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- 2, மணல்மேடு வீதி, ரோடு - 638 002.
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வுவகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே

பக்கம்


1. நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? 1
2. போதிக்க அழைப்பு 9
3. பெண்கள் பகுதி 15
4. புதிய ஏற்பாட்டு ஆராதனை (8) 19
5. "நீ ஏன் சந்தேகப்பட்டாய்?" 24
6. நரகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார் 30
7. முதிர்ச்சியின் அடையாளங்கள் 32

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 FEBRAURY - 1996 ISSUE - 3

# நல்லவர்கள் துன்பப்படுவதை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யோபு "என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். நீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர், அதை எனக்குத் தெரியப்படுத்தும் என்பேன்.

நீர் என்னை ஒடுக்கி உம்முடைய கைகளின் கிரியையை வெறுத்து, துன்மார்க்கனின் யோசனையைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ" என்று கர்த்தரை நோக்கி முறையிடுகிறார். (யோபு 10 : 2, 3)

அதே விதமான மனக்குழப்பத்தோடு இன்றைக்கும் கோடிக்கணக் கான மக்கள் தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து விளங்கிக் கொள்ள முடியாமல் "கர்த்தர் என்னை வெறுக்கிறாரா? அதனால்தான் நான் இப்படி வேதனையில் உழல்கிறேனா? பலவிதமான பாவங் களைக் கூசாமல் செய்கிற எத்தனையோ பேர் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் இந்த வேதனை?" என்று கேட்டு மருகுகின்றனர்.

பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தால் சாகிறான். ஒரு குடிகார ஒட்டுநர் பயங்கர விபத்துக்குள்ளாகிறான். சதா சிகரெட்டும் கையுமாக அலைகிறவன் காச நோயால் பீடிக்கப்படுகிறான். அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்கள் வெடி குண்டுகளுக்கு இரையாவதும், பள்ளி செல்லும் சிறார்கள் விபத்துக்

குள்ளாகி மடிவதும், பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள் பலவித கொடிய நோய்களால் பீடிக்கப்படுவதும் ஏன்?

கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் அன்பும், இரக்கமும் கருணையும் உள்ளவர் என்றால் ஏன் இவ்வளவு துன்பங்களை அவர் படைத்த உலகத்தில் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்? ஒரு வேளை உலகத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் சக்தியை இழந்து விட்டாரா? கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்றால், ஏன் இப்படி நல்லவர்கள் துன்பப்படுவதையும் துன்மார்க்கர்கள் செழித்து வாழுவதையும் அனுமதிக்கிறார்? இது போன்ற கேள்விகளுக்கு விடை தெரியாத காரணத்தால் ஒரு சிலர் கடவுளே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் போய் விடுகிறார்கள். ஏனெனில், கடவுள் ஒருவர் இருந்தால் இவ்வளவு கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார் என்று மனம் வெதும்பி விரக்தியடைந்து குறைப்பட்டுக் கொள்கின்றனர். வேறு சிலர் கடவுள் இருக்கலாம். ஆனால் அவரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் அவரை நினைத்துப் பார்த்துப் பெருமைப்படும் அளவுக்கு அவர் நல்லவரும் வல்லவரும் அல்லர் என்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் பாவம், கர்த்தர் என்னமோ நல்லவர் தான். ஆனால் நாளுக்கு நாள் பாவத்தில் திளைத்து, கலகம் செய்கிற மக்களோடு எத்தனை நாளுக்குத் தான் போராடுவார்? எப்படியோ தொலைந்து போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறார் என்கின்றனர். ஆனால் சிலபேர் எல்லாம் வல்ல இறைவன் அன்பும் அருளும் நிறைந்தவர், ஞானமுள்ளவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்துக்காகத் தான் செய்கிறார் என்று நம்புகின்றனர்.

இப்படி கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குத் தோன்றுகிற படியெல்லாம் இறைவனின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்கிற வேளையில், நான் மட்டும் எனக்கு எல்லாம் தெரியும், கடவுள் என்னோடே பேசி அதன் சரியான காரணங்களை இரகசியமாக எனக்கு வெளிப்படுத்தினார் என்று கூறிப் பெருமையடித்துக் கொள்ள விரும்பவில்லை. அல்லது இவைகளையெல்லாம் நமக்குத் தெளிவுபடுத்தித்தான் ஆகவேண்டும் என்று கோருவதும் எதிர்பார்ப்பதும் நியாயமல்ல. "ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும் நான் அறியாததையும் அலப்பினேன்..." என்று தான் தேவனுடைய செயல்பாடுகளுக்கான காரணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று முயன்று தோற்றுப்போன யோபு சொல்லுகிறதைக் கவனியுங்கள் (யோபு 42: 3).

ஆயினும் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. தேவன் தமது அநந்த ஞானத்தால் மனுக்குலத்துக்குத் தந்தருளியிருக்கிற பரிசுத்த வேதாகமத்தில் நம்முடைய பிரச்னைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகத் தீர்வுகள் சொல்லப்படாவிட்டாலும், பொதுவாக மனுக்குலத்துக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் சொல்லப்பட்டுத் தான் இருக்கின்றன. தேடி வாசித்து ஆறுதலடைவோம் வாருங்கள்.

## உலக நடைமுறையில் கோளாறுகள் :

"இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார். அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்" என்று கூறுகிறார் ஞானி சாலமோன் (பிர 7 : 29) தேவனால் செம்மையாகப் படைக்கப்பட்ட உலகத்தை தன் கெடுமதியால் சீர்குலைத்துப் போட்டான். நாட்டு நடப்புகளைக் கவனித்துப் பார்த்தால் துன்பங்களும், வேதனைகளும் அனைத்து மக்களையும், அகில உலகத்தையும் கவ்விக் கொண்டிருக்கிறதைக் காணமுடியும், நல்லவர்களுக்குத் திண்டாட்டம், துன்மார்க்கர்களுக்குக் கொண்டாட்டம்.

அப்படியானால் மனிதர்கள் உலக நடப்புகளில் தலையிட்டுக் கெடுத்துப் போடாதபடி படைத்திருக்கக் கூடாதா? அல்லது கெட்டது செய்யும் ஆற்றல் அற்றவர்களாக மனிதனைப் படைத்திருக்கக் கூடாதா? என்று கேட்கத் தோன்றுகிறது. படைப்பின் சிகரமாகிய மனிதனுக்கு தேவன் கொடுத்திருக்கிற தேர்வு செய்யும் உரிமம் மிகப் பெரிய ஆசீர்வாதம், அதை அவன் பயன்படுத்துவதில் கவனமாயிராவிட்டால் சில தவறான முடிவுகள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. அதைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்போமானால் அதற்கு உரிமம் என்ற பெயர் பொருந்தாது.

எடுத்துக்காட்டாக, ஒட்டுரிமையை எடுத்துக் கொள்வோம். ஒருவன் தன் மனதுக்குப் பிடித்த ஒரு கட்சிக்கோ அல்லது தனி நபருக்கோ தன் வாக்கை அளிக்கலாம் என்று அரசியல் அமைப்பு உரிமம் கொடுத்திருக்கிறது. அதற்கு மாறாக அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, மனிதனுக்கோ தான் ஒட்டளிக்க வேண்டும் என்று தாக்கீது பிறப்பித்தால் அது அரசியல் சாசனம் கொடுத்த குடியுரிமையைப் பறிப்பது ஆகும் அல்லவா? அதே போன்று, தேர்வு செய்யும் உரிமத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்து விட்டு, அவன் செயல்பாட்டைக் கட்டுப்படுத்த முயல்வது முறையாகாது. அப்படிச் செய்தால் அவன் ஒரு மனித இயந்திரமாகவோ அல்லது சாவி கொடுத்த பொம்மையாகவோ தான் இருப்பான். சுதந்தரமாய் செயல்பட முடியாது

இவ்வுண்மையை சாத்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தேவன் முதன் முதலில் படைத்த, ஆதாமையும் ஏவாளையும் வஞ்சித்ததால் தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்து, அவருடைய கட்டளையை மீறினார்கள். அதைத் தான் வேதாகமம் பாவம் என்று கூறுகிறது. எப்படி "எய்ட்ஸ்" என்னும் கொடிய நோய் சரீரத்தைச் சடுதியாய்த் தாக்கி, விரைவில் மரணமடையச் செய்கிறதோ அதை விடக் கடுமையாய் பாவம் ஆன்மாவை பாதிக்கச் செய்து பல கேடுகளை உண்டாக்கிவிட்டது (ரோமர் 1 : 18 -32; 5 : 12)

பாவம் உலகத்துக்குள் பிரவேசித்து மனிதனுடைய சுபாவத்தைக் களங்கப்படுத்தியதோடு நில்லாமல் தேவ கோபம் பல வழிகளிலும் வெளிப்படக் காரணமாயிற்று. மனிதனுக்கு ஆவிக்குரிய, சரீர மரணம் சம்பவிக்கச் செய்தது (ஆதி 3 :9) குழந்தைப் பேறு பயங்கர வேதனையுடன் நடைபெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது (ஆதி 3 ;16) பூமி சபிக்கப்பட்டு முள்ளும் குறுக்கும் முளைத்து மனிதன் பாடுகளுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. (ஆதி 3 : 17 - 19) ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தேவனோடு கொண்டிருந்த நல்லுறவு துண்டிக்கப்பட்டது (ஆதி 3 : 23, 24)

இந்த அவல நிலையை அப்போஸ்தலனாகிய பவுல் "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" என்று அங்கலாய்க்கிறார். (ரோமர் 8 : 22) இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கிற உண்மை என்னவெனில், இன்றைய உலகம் தேவன் படைத்த பொழுது இருந்த மாதிரி இல்லை என்றும் இன்று உலகில் பெருகி வரும் பிரச்னைகளுக்கு பாவமே முதல் காரணம் என்றும் துணிந்து கூறலாம்.

இதற்கு விமோசனமே இல்லையா? உண்டு. கருணை நிறைந்த தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பி மனுக்குலத்தை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ள வகை செய்திருக்கிறார் (யோவான் 3 : 16) அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் சமாதானமும், மகிழ்ச்சியுமுள்ள வாழ்க்கை வாழலாம்.

மாராவின் கசப்பான தண்ணீரை மதுராமாக்கிய தேவன் பிசாசின் வஞ்சகத்தால் சீரழிவுக்குள்ளான உலகத்தில் வாழ்கிற மக்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தால் அவர்களுக்குப்

பாதுகாப்பு அளித்து, இவ்வுலகத்தின் கேடுபாடுகளுக்குத் தப்பித்துக் கொள்ளும் மார்க்கத்தை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் (1 கொரி 10 : 13) மேலும் நமக்கு வருகிற சோதனைகளை மாற்றி அவைகளை நமக்கு நன்மைக் கேதுவாக மாற்றிப் போடுகிறார். (ரோமர் 8 : 28)

**I. சில சோதனைகளும் துன்பங்களும் நம்மை உஷார்ப்படுத்தி நமக்கு வரும் பெரும் அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள நம்மை ஏவுகிறது.**

எடுத்துக்காட்டாக, நமக்கு ஏற்படுகிற சில சரீர உபாதைகள் நம்முடைய சரீர உறுப்புகளில் ஏதோ ஒன்றோ, சிலதோ பழுதடைந்து கொண்டு வருகிறது அதைக் கவனி என்று எச்சரிக்கிறது. அதைப் புரிந்து கொண்டு வைத்தியம் செய்து கொண்டால், அவைகளைச் சீர் செய்து கொண்டு ஆரோக்கியமாக வாழலாம்.

**II. சில சோதனைகள் நமக்கு பொறுமை என்னும் நற்குணத்தைப் பெற்றுக் கொள்ள உதவி செய்கிறது.** (எபி 10:36) "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாய் எண்ணுங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக் 1 : 2, 3) சோதனைகள் கொஞ்ச காலப் பாடுகள் தான் என்றும், அவைகள் உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலை நிறுத்துவதற்கு அவசியம் என்கிறார் பேதுரு (1 பேதுரு 5 : 10)

**III.** மனுக்குலத்தைக் குறித்து எப்பொழுதும் பிராது செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிற சாத்தானின் வாயை அடைப்பதற்கு, தேவன் சில வேளைகளில் நமக்குச் சோதனையை கொடுக்கிறார். எடுத்துக்காட்டாக யோபுவின் வரலாற்றைக் கவனியுங்கள். யோபு உம்மை விருதாவாக சேவிக்கவில்லை. அவனுக்கு நீர் வசதியான வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறீர் அவைகளை நீர் பிடுங்கிக் கொண்டால் அவன் உம்மை சேவிக்க மாட்டான். மாறாக சபிப்பான் என்று சவால் விடுகிறான் சாத்தான். (யோபு 1 : 9-12) அதை மறுக்கும் வகையில் யோபுவை சோதித்துக் கொள்ளும்படி அனுமதி வழங்குகிறார் தேவன் (யோபு 2 : 3 - 7) ஆனால் யோபு சாத்தான் எதிர்பார்த்தற்கு மாறாக "தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" என்று கூறி துன்பங்களைப் பொறுமையோடே சகித்ததின் மூலம் பிசாசின் வாய் அடைக்

கப்பட்டது. அவருக்கும் இரட்டிப்பான ஆசீர்வாதங்கள் கிடைத்தன. (யோபு 42 : 12) யாக் 1 : 12)

**IV. இன்னும் சில துன்பங்களும் உபத்திரவங்களும் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் ஏற்படுகின்றன.**

யோவான் நற்செய்தி நூலில் நாம் வாசிக்கிற பிறவிக் குருடன் விஷயத்தில் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு ஆண்டவர் அளித்த பதில் "இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்கிறார் (யோவான் 9 : 3) அதே நற்செய்தி நூல் 11-ம் அதிகாரத்தில் மீண்டும் இயேசு "இந்த வியாதி மரணத்துக்கேதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது 'தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்' என்கிறார். (யோவான் 11 : 4)

**V. சில சோதனைகளும், துன்பங்களும் நம்மை கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றுக் கொள்ள உதவுகிறது.**

குயவன் சட்டி பானைகள் செய்வதைக் கவனித்து பாருங்கள் அவைகளை வனைவதற்கு முன்னர் அதை நன்றாகப் பிசைந்து, மிதித்துப் பதப்படுத்துகிறான். அதைப் போன்று நமக்கு நேரிடுகிற துன்பங்கள் நம்மை கர்த்தருக்கேற்ற பிள்ளைகளாக மாற்றுகிறது. "உபத்திரவம் பொறுமையையும் பொறுமை, பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது என்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" என்கிறார் பவுல் (ரோமர் 5 : 34)

**VI. நாம் கர்த்தரைச் சார்ந்து நிற்க ஏவுகிறது".** கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்.

நானே திராட்சைச் செடி; நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்கிறார் இயேசு (யோவான் 15 : 4, 5) அப்போஸ்தலன் பவுல் கூட "ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று. கலா 2 : 20. அதற்கு அவர் என்கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.

ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோசமாய் மேன்மை பாராட்டுவேன்.

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங் களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண் களிலும் நான் பிரியப்படுகிறேன்'' என்கிறார் (2 கொரி 12 : 9, 10)

**VII. நம்முடைய வாழ்க்கையைத் தூய்மைப்படுத்த உதவுகிறது.** சங்கீதக்காரன் ''எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுவது போல எங்களைப் புடமிட்டீர்

எங்களை வலைகளில் அகப்படுத்தி எங்கள் இடுப்புகளின் மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர். தீயையையும், தண்ணீரையும் கடந்து வந்தோம். செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்துவிட்டீர் என்று தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு ஈடுகட்டி பல மடங்கு ஆசீர் வாதங்களைக் கொடுத்ததாக மகிழ்ச்சி தெரிவிக்கிறார் (சங் 66 : 10 -12)

அப்போஸ்தலன் பேதுரு ''இதிலே நீங்கள் மிகவும் சந்தோசப்படுகி றீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமாதலால் இப்போது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்ப டுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப் படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுக் கிறிஸ்து வெளிப்ப டும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்'' என்கிறார் (1 பேதுரு 1 : 6, 7)

சில துன்பங்கள் நம்மைச் சீர்திருத்தம் செய்வதற்காகக் கொடுக்கப்படு கின்றன.

''கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிற போல, உங்களுக்குச் சொல்லியி ருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்.

நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாய் இருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்தி ரனுண்டோ?

எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.

அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும் போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்ச காலம் சிட்சிக்கிறார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார்.

"எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர். (எபி 12: 5 - 11).

இன்னும் சில துன்பங்கள் நம்முடைய ஊழியத்தை அனுபவ ரீதியாகச் செய்ய உதவுகிறது.

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்.

எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகிறது.

ஆதலால் நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதல் அடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும், இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது." 2 கொரி 1: 4 - 6.

E.Z. செல்வநாயகம்

"திருமறை ஆசான்" இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z.செல்வநாயகம் அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.96-டன் மூன்று ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்

# போதிக்க அழைப்பு

'பரிசுத்த ஆவியானவரின் பணி' என்னும் தொடரில் நாம் இப்போது போதிக்க அழைக்கப்பட்டவர்கள் என்னும் தலைப்பில் படிக்கிறோம்.

தாங்கள் போதிப்பதற்காக எவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பது குறித்து பலர் கதைகளை சொல்லி வருகின்றனர். ஒரு மனிதன் ஆகாயத்திலே G.P.C என்று மூன்று ஆங்கில எழுத்துக்களைப் பார்த்தானாம். அந்த மூன்று எழுத்துக்களும் 'GO PREACH CHRIST' (கிறிஸ்துவைப் போதிக்கப் போ) என்பதைக் கூறுவதாக அவன் முடிவு செய்தான். இந்த மனிதன் ஒரு விவசாயி. இவன் இவ்வாறு கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த மற்றொருவன் சொன்னான் : "அந்த மூன்று எழுத்துக்களும் 'GO PLOW CORN' (போய் தானியத்தை விதை) என்பதாக இருக்கும்." கர்த்தர் எவ்வாறு தங்களிடம் பேசி, போதிக்கப் போகச் சொன்னார் என்பதாக இன்னும் பலர் வர்ணிக்கிறனர். சிலருக்குக் கனவில் தோன்றுகிறார், வேறு சிலருக்கு காட்சியளிக்கிறார்! ஆனால், தமது வார்த்தையைப் போதிக்க மனிதர்களை தேவன் அழைக்கிறாரா? அப்படியானால், இந்த வழியில் தான் அவர்களை அழைக்கிறாரா?

புதிய ஏற்பாட்டில் மத்தேயு மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களை நாம் படித்துப் பார்க்கிற போது, தம்மைப் பின்பற்ற 12 பேர்களை கர்த்தர் எப்படி அழைத்தார் என்பதை நாம் காண முடியும். இம்மனிதர்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் என அறியப்பட்டனர். அவரைப் பின் தொடர, அவரது ஊழியத்தின் தொடக்க காலத்தில் அவர்கள் அவரால் நேரிடையாக அழைக்கப்பட்டனர். அவருடைய அற்புதங்களைக் காணவும், அவருடைய உபதேசங்களைக் கேட்கவும், அவர் சென்ற பின் தொடர்ந்து ஊழியஞ் செய்ய பயிற்சி பெறவும் அவர்களை அழைத்தார். அவர்கள் சத்தியத்தை மட்டுமே கற்பித்தார்கள் என்பதில் நிச்சயமாக இருக்கும்படியாகவும், அவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த அனைத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டவும், சத்தியத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தவும், அந்நிய பாஷைகளில் பேசும் வல்லமையை அவர்களுக்கு அருளவும், அற்புதங்களைச் செய்யவும், தேவனுடைய விருப்பத்தை அறிவிக்க அவரால் உண்மையிலேயே அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகவும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியா

னவரை அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார். (யோவான் 14:26; மாற்கு 16:20)

பின்னர், ஏழு சீடர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மேல் அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்களுக்கு அளிக்கவும் கேட்டுக் கொண்டனர். அப்போஸ்தலர்களுடைய பணிகளில் உதவியாக இருக்க வேண்டு மென்ற காரணத்தாலேயே இவ்வாறு செய்தனர். நாட்கள் சென்ற பின்னர், இன்னும் சிலர் அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கும் இந்த வல்லமை அளிக்கப்பட்டது.

பரலோகத்தின் பிதாவிடம் திரும்பிச் செல்லுவதற்கு முன்பு இந்த பெரியக் கட்டளையை அவர் அளித்தார் : "... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15, 16) மீண்டுமாக அவர் கூறும் போது, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத். 28:19, 20). அந்தக் கட்ட ளையைக் கவனியுங்கள்; போய் நற்செய்தியை அறிவியுங்கள்; யாருக்கு? உலக முழுவதுமுள்ள சகல மக்களுக்கும். யார் செல்ல வேண்டும்? அப்போஸ்தலர்களும், அவர்கள் மனந்திரும்பியவர்களும் செல்ல வேண்டும். நமது நாட்கள் வரை அது தொடருகிறது இல்லையா? ஏனெனில், நாம் கர்த்தருக்குள் மனந்திருப்பப்பட்டிருக்கிறோம். எனவே, நாம் போய் போதிக்க வேண்டும்.

ஆகாயத்திலே அடையாளங்களைக் கண்டு, அல்லது காட்சிகளைப் பார்த்து, அல்லது தேவனுடைய வசனத்தைப் போதிக்கச் செல் என்று சொல்லும் சத்தத்தைக் கேட்டு, தேவனுடைய மக்கள் யாரும் போதிக்கச் சென்றதாக புதிய ஏற்பாடு புத்தகத்தில் எங்கும் காண முடிவதில்லை என்பதை தயவு செய்தி கவனியுங்கள். அல்லது இன்று கர்த்தர் யாரையும் அவ்விதமாக அழைப்பதைக் காண முடியாது. உலக முழுவதும் சென்று நற்செய்தியைப் போதியுங்கள் என அவருடைய மக்கள் அனைவருக்கும் ஏற்கனவே அவர் கட்டளையிட்டிருக்கிறார். தனிப்பட்ட முறையில் எவரையாகிலும் சந்தித்து, போய் வசனத்தைப்

போதியுங்கள் என்று கேட்டுக் கொள்ளவோ அல்லது கட்டளை யிடவோ அல்லது பலவந்தமாக அவர்களை அனுப்பி வைக்கவோ அவருக்குத் தேவை என்ன?

நற்செய்தி வழியாக, அதாவது எழுதப்பட்ட வசனத்தில் வெளிப்ப டுத்தப்பட்ட நற்செய்தி வழியாக, அவரிடம் வந்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென கர்த்தர் நம்மை அழைக்கிறார். அதேபோல, எழுதப்பட்ட வசனத்திலிருந்து அறிவிக்கப்படும் நற்செய்தியை போதிப்பதின் மூலம், ஆத்துமாக்களை அவரிடம் வரும்படியாக அழைக்கிறார். கிறிஸ்து கூறினார் : "வருத்தப்பட்டுப் ப ஆரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பா றுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்." (மத். 11: 28, 30). தெசலோனிக்கேய கிறிஸ்தவர் களுக்கு பவுல் கூறினார் : "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருப்பாக எங்கள் சுவிசேஷத் தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்." (2 தெ 2:14) எனவே, நற்செய்தியானது மண்பாண்டங்களில் கொடுக்கப்பட்டி ருக்கிறது. அதாவது நற்செய்தியை எடுத்துச் செல்லும்படி கர்த்தருக்குச் சொந்தமான மனிதக் குலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (2 கொரி 4:7) தான் அவர்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையன்றி வேறொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து வரும் ஒரு தூதன் பிரசங்கித்தாலும் தேவனுடைய சாபம் அவன் மேல் வரும் என பவுல் கூறினார். (கலா 1:6, 9) அப்படியிருப்பதால், கர்த்தர் தமது நற்செய்தியை வார்த்தை யினாலே வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்குக் கீழ்ப்படிவோர் பிறருக்கு அதை எடுத்துச் செல்ல வேண்டும். கீழ்ப்படியும் போது, நற்செய்தியால் அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என சொல்ல முடியும். இறுதியாக, கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, பின்னர் அவர்களும் போய் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

சகலரும் நற்செய்தியை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமெனச் சொல்லும் போது, நற்செய்தியை எல்லாருமே வெளிப்படையாக பிரசங்கிக்க வேண்டுமென்று அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆணும் பெண்ணும் கலந்துள்ள ஒரு கூட்டத்தில் பெண்கள் பகிரங்கமாக பிரசங்கம் செய்யக் கூடாது. சபையைச் சார்ந்த பெண்கள், ஆண், பெண் இருபாலரிடம் தனியாகவும், பெண்கள் குழுவிலும், குழந் தைகள் வகுப்புகளிலும் பேசலாம். ஆனால் ஆண், பெண் கலந்துள்ள

கூட்டத்தில் அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். (1 கொரி 14:34; 1 தீமோ 2:11) இன்று பெண் போதகர்கள் இருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் சத்தியத்தையே போதித்தாலும் கூட, ஆண், பெண் கலந்த கூட்டத்தில் அவர்கள் எழுந்து நின்று போதித்தால், தேவனுக்கு அவர்கள் தனிப்பட்ட வகையில் கீழ்ப்படியால் போகின்றனர். ஆனால் எனக்குத் தெரிந்தவரை தங்களுடைய பகிரங்க போதனை மூலம் 100% பெண்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போவதோடு, தவறைப் போதித்து மனிதனுக்கும் தேவனுக்கும் தீங்கு விளைவிக்கின்றனர்.

ஆனால், ஆண்களைப் பற்றிய காரியம் என்ன? எல்லா ஆண்களுமே பகிரங்கமான பிரசங்கிகளாக இருக்க விரும்புவதில்லை; அல்லது அதற்குத் தேவையான திறமையோ பயிற்சியோ இருப்ப தில்லை. அவ்வாறு இருப்பின் கூட்டங்களில் அவர்கள் பேசக் கூடாது. ஆனால் நற்செய்திக்கு ஒருவர் கீழ்ப்படிந்திருக்கும் போது சபையில் அங்கத்தினராகிறார், உண்மையுள்ல ஒரு கிறிஸ்தவனாகிறார், நற்செய் தியைப் போதிக்க விருப்பமுடையவராக இருக்கிறார், அதற்குத் தகுதியு டையவராகவும் இருக்கிறார், கற்றுத் தேர்ந்து போதிக்க தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுகிறார். அப்படியிருக்கையில், கர்த்தர் அவருடைய வசனத்தைப் போதிக்க சகல விதத்திலும் அவரே ஏற்றுக் கொள்ளுகிறார்.

மீண்டுமாக, ஒரு திறமையும் இல்லாத, சுவிசேஷத்தைக் கொஞ்சமும் அறியாத தங்களை தேவன் போதிப்பதற்காக அழைத்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் வெளியிட வேண்டிய செய்திகளை தேவன் அவர்களுக்குத் தருவதாகவும் உரிமை கொண்டா டுபவர்கள் இன்று இருக்கின்றனர். நிச்சயமாக, அவர்கள் கூறுவது தவறு மேலுமாக, அவர்கள் கற்பிக்கும் சகல காரியங்களுக்கும் பரிசுத்த ஆவியானவரின் பேரில் பழியைப் போட்டு விடுவது மிகவும் வருத்தம் அளிக்கும் செயலாக உள்ளது. போதிப்பதில் மக்களை அற்புதமான விதத்தில் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்தினாலும், அவ்வாறு அவர் செய்வதில்லை, தவறைப் போதிக்க அவர் வழி நடத்த மாட்டார். போதிப்பதற்காகத் தங்களை அழைத்திருப்பதாக உரிமை கொண்டாடும் பிரசங்கிமார்களைக் கவனித்துப் பாருங்கள்; பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்படுவதாகக் கூறிக் கொண்டு அவர்கள் போதிக்கிற காரியங்களையும் கவனியுங்கள். சுவிசேஷத்தில் காணப்படாத பலவற்றை அவர்கள் போதித்துக் கொண்டிருப்பதை நீங்கள் காணமு டியும்; அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரண்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக, வேதாகமத்தில் நாம் படிக்காத, மனிதன் உண்டாக்கிய பெயர்களைத் தாங்கிய இன்னும் இதுபோன்

எத்தனையோ சபைகளில் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த மக்கள் கர்த்தரை எப்படி பிரதிநிதித்துவப்படுத்த முடியும்? அவர்களால் முடியாது. அவர்கள் பிரசங்கிகளாக இருக்கலாம், ஆனால் தவறையும் சாபக்கேடானவைகளையும் அவர்கள் போதிக்கின்றனர். யோவான் கூறினார் : "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" *(1 யோவான் 4:1)*. பல கள்ளத் தீர்க்கதரிசிகளும், போதகர்களும், பிரசங்கிமார்களும் உலகத்தில் தோன்றியிருப்பதாக யோவான் கூறுகிறார். அன்று அது எவ்வாறு உண்மையாக இருந்ததோ அதே போல இன்றும் அது உண்மையே. இந்தப் பிரசங்கி களைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்று அவர் சொன்னார். வேறு விதமாகக் கூறினால், அவர்களுடைய போதனைகளை தேவனுடைய வசனத்தோடு நாம் ஒத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் கூறுவது சுவிசேஷத்தில் கற்பிக்கப்படாவிட்டால், அல்லது கர்த்தர் சொல்லியிருப் பவைகளோடு ஒத்துப் போகாவிட்டால், அவர்கள் எதைக் கூறிய போதிலும், அவர்கள் கள்ளப் போதகர்களே.

மீண்டுமாக யோவான் கூறினார் : "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமார னையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதே சத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க் கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்." *(2 யோவான் 9-11)*

ஆம், இன்று நமக்குப் போதகர்கள் தேவை, நிறைய பேர் தேவை, தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளுவதின் மூலமாக அழைக் கப்பட்டுள்ளவர்கள் தேவை, சத்தியத்தை மட்டுமே போதிக்கக் கூடிய வர்கள் தேவை. கர்த்தரையும் மனித ஆத்துமாக்களையும் நேசிக்கும் மனிதர்கள் நமக்குத் தேவை. கிறிஸ்துவை அறிவிக்கும் பணிக்காக தங்கள் ஜீவனையும் அர்ப்பணிப்பவர்களாக இருக்க வேண்டும். போதிப்பதை ஒரு தொழிலாகக் கருதும் கூலிக்கு மடிப்பவர்கள், அல்லது சம்பளண் கொடுத்தால் தவறையும் தவறாமல் போதிக்கத் தயாராக இருப்பவர்கள் நமக்குத் தேவையில்லை. வாலிப பிரசங்கி தீமோத்தே யுக்கு பவுல் கூறினார் : "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக் கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசங்

னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்ட ளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று." (2 தீமோத்தேயு 4: 1-5) பவுல் இங்கு கூறியிருப்பவற்றை நாம் தீவிரமாக சிந்திப்போம்.

பாதகனே, நீ எதைப் போதிக்கிறாய் என்பதில் கவனமாக இரு. மக்களே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதில் கவனமாக இருக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

J.C. Choate எஸ்.எஸ். ராஜன்

---

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

**20 ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10 மட்டுமே.**

வேண்டுவோர் தொடர்பு கொள்க
**E.Z.S. ராஜநாயகம்**
கிறிஸ்துவின் சபை, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

**பெண்கள் பகுதி**

# மணமுறிவை மனதிலும் நினைக்கவேண்டாம்

பொதுவாகவே சினிமா, தொலைக்காட்சி போன்றவைகள் தேவனுடைய திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கும் சாத்தானின் வல்லமையான ஏவுகணைகள். அதிலும் மேலை நாட்டு சினிமாக்களும் தொலைக்காட்சிகளும் இந்த நாசவேலையில் முன்னணியில் நிற்கின்றன. தேவனால் வரையறுக்கப்பட்ட திருமணத்தின் சீரிய நோக்கங்களை உடைத்த உருக்குலைத்து, "கண்டதும் காதல்", ஒத்துப் போகிற வரைக்கும் இல்லற வாழ்க்கை, முடியாவிட்டால் இருக்கவே இருக்கிறது "விவாகரத்து" என்ற இழி நிலைக்கு இளம் வட்டங்களை உசுப்பிவிட்டுத் தாறுமாறான இல்லற சுகங்களை ஊக்குவிக்கின்றன. சட்டதிட்டங்களுக்குக் கட்டுபட்டு வாழ்வது கோழைத்தனம் என்ற எண்ணம் விஷவாய்வு பரவுவதுபோல் பரவி இளைஞர்களின் உள்ளங்களை பாழ்படுத்தி வருகிறது. திருமணம் சம்பந்தப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள், தேவ ஆலோசனைகளை மீறிப் போர்க் கொடி உயர்த்தும் இளசுகளை வாலிப உலகம் வாழ்த்தி வணங்குகின்றன.

ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் தம்முடைய வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சி என்று கருதப்படும் இப்புனிதமான திருமணம் போன்ற காரியங்களில் தேவனுடைய ஆலோசனை என்ன என்று தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். "..ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள். இப்படியிருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாமிசமாயிருப்பார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்ற திருமணத்தின் உயர்ந்த நோக்கத்தை விவரிக்கிறார். (மத். 19 : 4, -6) மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் தேவ ஆலோசனையே மிகச் சிறந்தது. ஆகையால் திருமணத்தை ஒருவரும் அற்பமாக எண்ணி யோசனையின்றிச் செய்யாமல் கருத்தோடும் ஜெபத்தோடும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். அதற்கப்புறம்

திருமணத்தில் இணைக்கப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து இருவரும் சிந்தனையிலும், செயலிலும், ஒருமனப்படுவதற்கு முயல வேண்டும். ஏனெனில் அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

"ஒவ்வொருவனும் தன் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன்" (கொரி. 18 : 24) என்று கூறப்பட்டிருப்பதின் பொருளை உணர்ந்து கணவன் மனைவிக்குள் ஏற்படும் சிறு சிறு மனஸ்தாபங்களைப் பொருட்படுத்தாமல் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆனால் நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? எந்த ஒரு தேவனுடைய திட்டத்தையும் மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்வது கிடையாது. தாயையும், தகப்பனையும் விட்டு மனைவியோடு இசைந்திருக்கக் கடவன் என்று தேவ ஆலோசனை தெளிவாக இருந்தும் சில ஆடவர்கள் பெற்றோர்களுடைய நிழலிலேயே தாபரிக்க விரும்புகிறார்கள். வேறு சிலர் தனியாகப் போய் நாம் சமாளிக்க முடியாது என்று பயந்து கொண்டு தாயாரின் முந்தானையைப் பிடித்துக் கொண்டே நடக்க விரும்புகிறார்கள். இந்தக் கூட்டுக் குடும்ப முறை சில குடும்பங்களில் வெற்றி நடைபோடும். பல குடும்பங்களுக்குச் சரிப்பட்டு வருவதில்லை. ஆரம்பத்தில் லேசாகப் புகைந்து, மோதல் ஏற்பட்டு பிரச்னைகள் முற்றி சண்டையிலும் சச்ரவுகளிலும் போய் நிற்கும். பரஸ்பரம் ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டுகள் தொடரும். இப்படிப்பட்ட கட்டங்களில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது புதிதாய்க் குடும்பத்தில் வந்த மருமகள் தான். சம்பந்தப்பட்ட அனைவரும் தாங்கள் இந்த விவகாரங்களில் என்ன செய்திருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு வேளை தேவனுடைய ஆலோசனையை நாம் புறக்கணித்து விட்டதால் ஏற்பட்ட கோளாறு என்றெல்லாம் சிந்திக்காமல் சோதனைகள் வந்து வேதனைகள் பெருகும் போது மனம் வெறுத்து தான் தேவனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விட்டு "போதும் திருமண வாழ்க்கையின் சுகம்" என்று விரக்தியடைந்து விவாகரத்து பற்றிய சிந்தனையில் மூழ்குவது கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல.

இரண்டு வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்ந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரே மாம்சமாக இணைந்து போவது கடினம். கொஞ்சம் நாள் பிடிக்கும் என்று தேவனும் அறிவார். இருப்பினும் வேசித்தன முகாந்தரம் தவிர மற்ற எந்தக் காரணத்திற்காகவும் மனமுறிவு பற்றி சிந்திக்கக்

கூடாது என்று ஆலோசனை கூறியிருக்கிறார். (மத். 19 : 3 -9 ) மணமுறிவினால் தேவன் ஏற்படுத்திய முதல் அமைப்பாகிய குடும்பத்துக்கு ஏற்படும் இழப்புகளையும், துன்பங்களையும், சற்றே எண்ணிப் பாருங்கள், முதல் இணைப்பினால் பிறந்தகுழந்தைகளின் நலம் பாதிக்கப்படும், பெண்மைக்குப் பெருமை தரும் கற்பு நெறி காயலான் கடைச் சரக்காகிவிடும். ஒழுக்க நெறி சிதையும்; குற்றங்கள் பெருகும் பாலியல் நோய்கள் பற்றும். இப்படி எத்தனையோ பிரச்சனைகள் உருவாகும்.

சொல்லப் போனால் குடும்பத்திற்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கு திருமணமுறிவு ஒரு தீர்வே அல்ல, மாறாக அது அதிகமான பிரச்சனைகளை உருவாக்கும் என்றால் மிகையாகாது. விவகாரத்து சமுதாயம் என்ற மாளிகையின் அஸ்திபாரமாகிய குடும்பம் என்னும், கட்டுக் கோப்பைக் குலைத்துப் போடுவதின் மூலம் அதன் மேல் கட்டப்பட்டுள்ள சமுதாய அமைப்புக்கு பெரும் தீமைகளை விளைவிக்கும், ஆகையால் வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போது அவைகளை ஞானமாகச் சமாளிப்பதற்கு முற்பட வேண்டுமேயல்லாமல் மணமுறிவு என்பதை மனதிலும் நினைக்கக் கூடாது. அதைவிட கொஞ்சம் விட்டுக் கொடுத்து வாழ்ந்து சம்பந்தப்பட்டவர்களுடைய அன்பைப் பெற முயற்சிக்கலாமே.

கணவன்மார்கள் முரடர்களாகவும், மனைவி மக்களின் நலனில் அக்கறையில்லாதவர்களாகவும், தன்நலமுள்ளவர்களாகவும், நடந்து கொள்பவராகக் கூட இருக்கலாம். அதற்குச் சவால் விடுகிற பாணியில் மனைவிமார்களும் நடந்து கொண்டால் குடும்பம் சிதையும். நஷ்டம் பெரும்பாலும் பலவீனமான பாத்திரமாகிய தாய்க் குலத்துக்கே. கத்தி சுரைக்காய் மேல் விழுந்தாலும், சுரைக்காய் கத்தி மேல் விழுந்தாலும் பாதிக்கப்படுவது சுரைக் காய் தானே. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று கற்பித்திருக்கிறபடி செய்து பார்க்க முயலலாமே. (மத் 5 : 44) உங்கள் பொறுமையும் சகிப்புத் தன்மையும், உங்கள் ஜெபமும் என்றாவது ஒரு நாள் அவர் உள்ளத்தை உடைத்து உங்கள் மேல் அன்பு செலுத்த வழிகோலுமே. முயன்று பாருங்கள்.

இந்த பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதற்கு வருமுன் காத்தல்

என்ற தடுப்பு முறையைக் கையாள்வது இன்னும் சிறந்தது. திருமணத்துக்கு முந்தியே சம்பந்தப்படவிருக்கிற குடும்பம், பையன் அல்லது பெண் ஆகியோருடைய பண்புகள் குடும்ப சூழ்நிலைகள் ஆகியவைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முற்படுவது பயன்தரும். அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்ற தேவ ஆலோசனையை ஏற்றுக் கொண்டு (2 கொரி 6 : 14) அவர்களுடைய விசுவாச நிலையை கூடத் தெரிந்து கொண்டு திருமண ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களில் கொஞ்சம் காலதாமதம் கூட ஆகலாம். ஆனால் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல என்று ஆதாமுக்கு ஒரு துணையை ஏற்படுத்தியவர் ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணையும் ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணையும் உண்டாக்கியே இருப்பார் என்று நம்பிக்கையோடு பொறுமையாயிருந்தால் கர்த்தர் ஏற்ற காலத்தில் வாய்க்கச் செய்வார்.

B.B. சோட்

R.R. MeT:

## மாயம் வேண்டாம் : மனந்திரும்பு

*நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?*

*இனி வீண் காணிக்கைகளைக் கொண்டுவர வேண்டாம். தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாய் இருக்கிறது. நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வு நாளையும், சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்.*

*உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது! அவைகளை சுமந்து இளைத்துப் போனேன்.*

*நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.*

*உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றி விட்டு தீமை செய்தலை விட்டு ஓயுங்கள்.*

*நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள் ஒடுக்கப்பட்டவைகளை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.*

**(ஏசாயா 1: 12 - 17)**

## புதிய ஏற்பாட்டு ஆராதனை (8)

# வேதாகமக் கல்வி

புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள ஆராதனையின் ஐந்து செயல்களில் வேதாகமக் கல்வியும் ஒன்று. அது நமக்குக் கட்டளையாக இருப்பது மட்டுமல்லாமல், ஆதி கிறிஸ்தவர்கள் கர்த்தரை தொழுது கொள்ளும்படி கூடும்பொழுது வேதாகமக் கல்வியும் நடைபெற்றதாக முன்னுதாரணம் உண்டு.

வேதாகமக் கல்வியை தனித்தோ கூட்டமாகவோ எந்த நேரத்திலும் நடத்தலாம். ஆனால் ஆராதனையின் ஒரு பகுதியாக ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் குறிப்பாக அது இடம் பெற வேண்டுமென்பதைப் பற்றி இங்கு நாம் கவனிக்கிறோம்.

சுவிசேஷ வசனங்களைத் தாங்களாகவே படித்துக் கற்றுக் கொள்வது மூலமோ, அல்லது தேவனுடைய வார்த்தையை ஒருவர் போதிப்பதைக் கேட்பதின் மூலமோ, ஆராதனையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்படலாம். துரோவா பட்டணத்து சகோதரர்கள் ஆராதனையில் கூடி வந்த சமயத்தில் பவுல் அவர்களுக்குப் போதிப்பதை அப் 20 7ம் வசனத்தில் நாம் பார்க்கிறோம். அப். 17 : 10 - 12 வசனங்களில் நாம் படிக்கிறோம் :

"உடனே சகோதரர் இராத்திரி காலத்தில் பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போனார்கள். அந்தப் பட்டணத்தார் மனோவாஞ் சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தனர். அதனால், அவர்களில் அநேகம் பேரும் கனம் பொருந்திய கிரேக்கரில் அநேக ஸ்திரீகளும் புருஷர்களும் விசுவாசித்தார்கள்." "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என கிறிஸ்து கற்பித்தார். (யோவான் 5 : 39).

வாலிபப் போதகன் தீமோத்தேயுவை பவுல் உற்சாகப்படுத்தி, "நீ வெட்கப்படாத ஊழியக்கார

னாயும் சத்திய வசனத்தை நிதான மாய்ப் பகுத்துப் போதிக்கிறவ னாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத் தும்படி ஜாக்கிரதையாயிரு" எனக் கூறினார். (2 தீமோ. 2 : 15). "நீதியின் மேல் பசிதாகமுள்ள வர்கள் பாக்கியவான்கள்; அவர் கள் திருப்தியடைவார்கள்" என கிறிஸ்து கூறினார். (மத். 5 : 6). மீண்டும்"அவர் பிரதியுத்தரமாக: மனிதன் அப்பத்தினாலே மாத்திர மல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என் றார்". (மத். 4 : 4).

நாம் கற்றுக் கொள்ளுவது மட்டுமல்ல, ஆனால் சரியா னதைக் கற்றுக் கொள்ள வேண் டியது மிகவும் அவசியம். நாம் கேட்கும் போதனை அல்லது கல்விக்கும் இது பொருந்தும். அப்போஸ்தலர் பவுல் கூறுகி றார்: "ஆதலால் விசுவாசம் கேள் வியினாலே வரும், கேள்வி தேவ னுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர். 10 : 17). அதாவது, நாம் தவறைக் கேட்க நேரிட்டு, முக்கி யமாக, நாம் அதைச் சோதித்துப் பார்க்காவிடில், தவறைத்தான் நாம் விசுவாசிப்போம், என்று அதற்கு அர்த்தம். ஆனால் நாம் சத்தியத்தைக் கேட்டால் சத்தி யத்தையே விசுவாசிப்போம்.

தேவன் இன்று பேசியிருக் கிறார்; அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்து மூலமாக நம் முடன் அவர் பேசியிருக்கிறார். (எபி. 1 : 1, 2). மறுரூபமான மலையின் மீது, இயேசுவைப் பற்றி தேவன் தாமே கூறினார் : "...இதோ என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக் கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் . . . " (மத். 17 : 5). என்ற போதிலும் கிறிஸ்து தேவனுடைய வசனத்தைப் பேசி னார். "இயேசு அவனுக்குப் பிரதி யுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக் கொள்ளக்க டவன், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோ டே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக் கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினு டையதாயிருக்கிறது." (யோவான் 14 : 23, 24). அதன்பின்னர் இப்படியாக வசனம் குறிப்பிடப் பட்டுள்ளது: "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்பு தங்களையும் இயேசு தமது சீடருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமார னாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத் தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது."

(யோவான் 20 : 30, 31). மேலுமாக வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறியவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அது பூரணப் பிரமாணமாக இருக்கிறது. (2 தீமோ, 3 : 16, 17; யாக். 1 : 25).

மேலே கண்ட உண்மைக்கேற்ப, நாம் கர்த்தருடைய நாளிலே கூடிவந்து, தேவனுடைய வசனத்தை ஏன் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்கு பல காரணங்கள் உள்ளன:

1. அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் நாம் அதை கற்க வேண்டும். (எபி. 13 : 7 : 1பேதுரு 1 : 23; எபே. 6 : 17). கர்த்தர் நம்மை இருளில் வைக்காமல், தமது விருப்பத்தை நமக்கு வெளிப்படுத்தியிருப்பது எவ்வளவு அருமையான காரியம்.

2. தேவனுடைய விருப்பத்தை நாம் முற்றிலும் பூரணமாக அறிந்து கொள்ள விரும்ப வேண்டும். (அப். 13 : 7) எனவே, நாமேதான் படித்துக் கற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு, கர்த்தரின் விருப்பத்தை நாமே படித்துக் கற்றுக் கொள்ளக்கூடிய புத்திசாலித்தனத்தை கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

3. நாம் கற்றுக்கொள்ள விரும்பாவிட்டால் ஏமாற்றப்பட்டு விடுவோம் (எபே. 4 : 14; எபே. 3 : 6; யாக். 1 : 22). கிறிஸ்தவம் என்ற பெயரில் பல காரியங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அது சத்தியமா இல்லையா என்று நா அறிவோம்? நாம் கேட்பவற்றை தேவனுடைய வசனத்தோடு ஒத்துப்பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆவிகள் அல்லது போதகர்கள் தேவனால் உண்டானவர்களா, இல்லையா என நாம் சோதித்தறியும்படி யோவான் கூறினார். (யோவான். 4 : 1). கர்த்தரின் வசனத்தைத் தொடர்ந்து சோதித்தறியும் ஒருவன் ஏமாந்து போக முடியாது.

4. தேவனுடைய விருப்பத்தை பிறருக்குக் கற்பிக்கக் கூடிய அளவிற்கு நாம் அதைக் கற்றுக் கொள்ள விரும்ப வேண்டும். பவுல் கூறினார்: "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலை கொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்" 1 தீமோ. 4 : 16) ஆதிக் கிறிஸ்தவர்களைப் பற்றி வசனம் கூறுகிறது: "சிதறிப்போனவர்கள் எங்குத் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்." (அப். 8 : 4).

நான் கற்றுக் கொள்ளுவதைத் தொடரும் இச்சந்தர்ப்பத்தில் 2 தீமோத்தேயு 2 : 15ம் வசனத்

திற்கு நாம் திரும்பிச் செல்வோம். சத்திய வசனத்தை சரியாகப் பகுத்துணர்ந்து கற்றுக் கொள்ளும் அவசியத்தப் பற்றி அங்கே பவுல் கூறுகிறார். நமது பாடத்திலும் அவ்வாறே செய்வோம். அதாவது, வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது என நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டில் பிதாக்களில் சட்டம் மோசேயின் சட்டம் ஆகியவை நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் அல்ல என்பதையும் நாம் அறிந்து கொள்வோம். புதிய ஏற்பாடு, கிறிஸ்துவின் சட்டத்தை உடையதாக இருக்கிறது. வேறுவிதமாகக் கூறின், பழைய ஏற்பாட்டு பகுதி கிறிஸ்துவின் மரணத்திற்கு முந்திய கால மக்களுக்கான சட்ட நூல். அதனால் தான் ஒன்று பழையதும் மற்றொன்று புதியது என்று ஆயிற்று. ஆனால், நாம் எங்கே இருக்கிறோம்? சந்தேகமில்லாமல், சிலுவைக்குப் பிந்திய பக்கத்தில் நாம் வாழ்வதால் புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டபடி கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் வாழ்கிறோம். (எபி. 9 : 16, 17; எபி. 10 : 9).

அப்படியானால், பழைய ஏற்பாட்டை தேவனுடைய வார்த்தை என்று நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமோ என்ற கேள்வி எழுகிறது. ஆம் என்பதுதான் இதற்கு நிச்சயமான பதில், என்றபோதிலும், சட்டம் என்ற வகையில் அது நம்மையோ அல்லது வேறு எவரையுமோ இப்போது கட்டுப்படுத்தவில்லை. அப்படியானால் நாம் ஏன் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்? கீழே காணும் பல காரணங்களுக்காக நாம் பழைய ஏற்பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

1. சகலமும் படைக்கப்பட்டது பற்றியும், எல்லாவற்றின் தொடக்கத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள;

2 மனிதனுடைய சரித்திரத்தையும், தேவன் அவனை நடத்திய விதத்தைப்பற்றியும் அறிய;

3. நமக்கு முன்னுதாரணமாக அது எழுதப்பட்டிருப்பதாக பவுல் கூறுவதால். (1 கொரி. 10 : 6). உண்மையில், பல உதாரணங்களை அது கொண்டுள்ளது.

4. அதில் காணப்படும் கொள்கைகள், அது அளிக்கப்பட்ட நாளில் இருந்தது போலவே இன்றும் உண்மையாக இருப்பினும், அது நமக்குச் சட்டம் அல்ல.

5. நாம் இப்போது ஒரு சிறந்த சட்டத்தின் கீழ் வாழ்ந்து வருவதையும் இதில் நிறைய நம்பிக்கை நமக்கு உள்ளது என்பதை நாம் காணவும்; (யோவான் 1:17).

தேவனுடைய வசனத்தை மிகவும் வல்லமையுடன் நாம் கற்றுக் கொள்ள உதவியாகவும்,

அவற்றைச் சரியாக பகுத்து உணரவும், நமது வேதாகமக் கல்விக்கு சில சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பாடத்தை பல முறைகள் படித்தல்
2. சந்தர்ப்பத்தையும் கவனித் துப் படித்தல்
3. யார் பேசுகிறார்?
4. யாரிடம் அவர் பேசுகிறார்?
5. எப்போது அது பேசப் பட்டது?
6. அது மறைபொருள் மொழி யா, அல்லது நேரிடை மொ ழியா?
7. அது ஒரு கட்டளையா?
8. நமது இரட்சிப்புக்கு அது சம்பந்தப்பட்டதா?

மேலும், கீழ்க்கண்ட உபகர ணங்களும் உங்கள் வேதாகமக் கல்விக்குப் பயன்படும்: வித்தியா சப்பட்ட மொழியாக்கங்கள், ஒரு வேதாகம அகராதி, ஒரு வேதாகம ஒத்த வாக்கிய புத்தகம், விளக் கவுரை நூல்கள் போன்றவை. என்றாலும், இவை அனைத் திற்கும் மேலாக, ஜெபத்துடன் உங்கள் வேதாகமத்தையே படியுங் கள். கற்றுக் கொள்ளுங்கள். வேதாகமத்தைப் பற்றி பலருக்கு நிறைய விஷயங்கள் தெரியும். ஆனால் வசனங்களின் அர்த்தம் தெரியாது.

கர்த்தர் நம்மிடம் கேட்டுக் கொள்ளுவது போல, நீங்களும் நானும் செய்யும் போதும், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் பரிசுத்தவான்களோடு கற்றுக் கொள்ள கூடி வரும் போதும், நாம் கிறிஸ்தவர்களாக வளரவும், விருத்தியடைவும் உதவும் வேதாகம அறிவு கிடைக்கும். எல்லாரும் இவ்வித மாகச் செய்தால், பின்னர் சபையானது வலிமையுடையதாக இருக்கும். தேவனுடைய வார்த்தையே நம்மை இரட்சிக் கிறது என்றும், நம்மை ஒற்றுமை யாக்குகிறது என்றும், ஒருவேளை நமது மத நண்பர்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியும்.

J.C. சோட்.

**வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.**

**யோவான் 5 : 39**

# "நீ ஏன் சந்தேகப்பட்டாய்?"

நாம் விசுவாசிக்க வேண்டுமென வேதாகமம் உபதேசிக்கிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்," (எபி. 11:6). "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என கிறிஸ்து கூறினார். (யோவான் 14 : 1). நாம் அவரை விசுவாசித்தால், அவருடைய வார்த்தையையும் விசுவாசிப்போம், அவருடைய உபதேசங்களுக்கும் கீழ்ப்படிவோம். அவர் சொன்னார், "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்". (யோவான் 15 : 14). மீண்டுமாக,"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" என்றார். (யோவான் 14 : 15). இதற்கு எதிர்மறையாக,"விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என கிறிஸ்து கூறினார். (மாற்கு 16 : 16). அவிசுவாசத்தின் மறுபெயர் சந்தேகம். ஆதியிலிருந்தே மனிதனைத் தொற்றிக் கொண்டு வந்துள்ள நோயான இது ஒரு பாவம்.

ஆரம்பத்திற்கே நாம் சென்றால், ஏவாளின் மனதிலே சந்தேகத்தை விதைத்த பாம்பின் கதைக்கு வருகிறோம். விளைவாக, அவள் தேவனுக்கு விரோதமாகவே பாவம் செய்ய முற்பட்டாள். உங்கள் வேதாகமத்தை எடுத்து படித்துப் பாருங்கள்: "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் : நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இரு

ருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச் சைகளை உண்டு பண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே, தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு : நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன் : நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயி ருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான். அப்பொழுது அவர் : நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம் : என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி : நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள் : சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்". (ஆதியாகமம் 3 : 1 - 13).

தேவன் என்ன கூறியிருந்தார் என்பதை சாத்தான் அறிந்திருந்தான்; ஏவாளும் ஆதாமும் அறிந்திருந்தினர் என்பதையும் நீங்கள் காணமுடியும். "தெரியாது" என்று காரணம் காட்டித் தப்பித்துக் கொள்ள அவர்களுக்கு இயலாது. தேவனுடைய விருப்பம் என்ன என்பதை அவர்கள் அறிந்ததோடு மட்டுமல்லாமல், அதை நன்கு புரிந்தும் இருந்தனர். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அவர்கள் விரும்பக்கூடிய சகலமும் அங்கு கிடைத்தன என்ற போதிலும், தோட்டத்தின் நடுவிலிருந்த ஒரே ஒரு மரத்தின் கனியை மட்டும் புசிக்க வேண்டாமென்றும், புசித்தால் சாவீர்கள் என்றும் தேவன் அவர்களுக்கு அறிவித்திருந்தார். இங்கே தான் சாத்தான் தனது வேலையைக் காட்ட வந்து சேர்ந்தான். சோதித்து, பின்னர் ஏமாற்ற அவன் ஏவாளைத் தேர்ந்தெடுத்தான். அதைச் செய்ய, அவளுடைய மனதில் முதலில் சந்தேகத்தை விதைத்தான். தேவன் கூறியிருந்த போதிலும், நிச்சயமாக அது அவ்வாறு அல்ல என்று ஒரு சிறு விளக்கமளித்தான். "நீங்கள் சாகவே சாவதில்லை" என பாம்பு கூறிற்று. பின் தன் கூற்றுக்குக் காரணம் கற்பித்தான் : "உங்கள் கண்கள் திறந்து, நன்மை தீமை அறியும் தேவர்களாக நீங்கள் மாறிவிடுவீர்கள்; எனவே தான் தேவன் உங்களிடமிருந்து இம்மரத்தின் கனியை விலக்கி வைத்துள்ளார்" என்று ஒரு பெரிய பொய்யை அவிழ்த்து விட்டான். ஆரம்பத்திலிருந்தே, 'மனிதன் தேவனாகலாம்' என்ற கூற்றை அவன் ஒப்புக் கொள்ள வைப்பதில் சாத்தான் பெரும் முயற்சி செய்திருப்பது ஆச்சரியமாக இல்லையா? இன்று இந்து மதமும், இன்ன பிற மதங்களும் மனிதனைக் கடவுள் என்று கூறவில்லையா? ஆனால், பரிதாப

தங்களைக் கடவுள்கள் என்று கூறிக் கொள்ளாத மற்ற சாதாரண மனிதர்களைப் போலவே, இந்த கடவுள்களும் மரித்து போகின்றனரே? எல்லா மனிதர்களைப் போலவும், புசித்து, குடித்து, தூங்கி, மரித்துப் போகக் கூடிய இவர்களை 'கடவுள்' என யார் நம்புவர்? இவை அனைத்தையும் செய்பவர்கள் எவ்வாறு கடவுளாக இருக்க முடியும்? ஆனால் இந்தப் பொய் இன்று நேற்றல்ல, ஆதாம், ஏவாள் காலந் தொட்டே சாத்தானால் அவிழ்த்து விடப்பட்ட தொடர்கதையாக வந்து கொண்டிருக்கிறதே! "உங்கள் கண்கள் திறக்கும் என தேவனுக்குத் தெரியும்; நன்மை தீமை அறியக்கூடிய தேவனைப் போல நீங்கள் ஆகிவிடுவீர்கள்" என்று ஏவாளிடம் தந்திரமாகப் பேசி, தனது பொய்யை அரங்கேற்றி வைத்தான். அவர்கள் கண்கள் திறக்கப்பட்டதும், நன்மை, தீமை அறியும் அறிவைப் பெற்றுக் கொண்டதும் மட்டுமே நடந்தது; ஆனால் தேவர்கள் போல் மாறுவீர்கள் என்று சாத்தான் கூறியது பச்சைப் பொய் என்பது புரிந்து போயிற்று. எப்படியிருப்பினும், அந்தப் பொய் வேலை செய்தது. அந்தப் பெண்ணின் பார்வையில், அக்கனி கவர்ச்சியாகத் தோன்றி அவளைக் கவிழ்த்துப் போட்டது. இப்படியாக, மாம்ச இச்சையிலும், ஜீவியத்தின் பெருமையிலும், கண்களின் இச்சையிலும் அவள் சோதிக்கப்பட்டு, அக்கனியைப் பறித்து தான் உண்டது மாத்திரமின்றி தனது கணவனுக்கும் கொடுத்து, அவனும் அதை உண்டான். பாவம் அங்கே உதயமாயிற்று.

விளைவுகளும் தோன்றத் தொடங்கின; அவர்கள் கண்கள் திறந்து, நல்லது, கெட்டதை அறிந்தனர்; தங்கள் நிர்வாணத்தை உணர்ந்தனர்; மறைத்துக் கொள்ள மரங்களின் இலைகளால் தங்களுக்கு ஆடைகளை உண்டாக்கினர். பின்னர், தேவன் தோட்டத்திற்கு உலாவ வந்த போது, அவர்கள் தங்கள் நிர்வாணத்திற்கு வெட்கப்பட்டு, அவரிடமிருந்து மறைந்து கொண்டனர். அவர்கள் செய்ததென்ன என்று தேவன் கேட்டபோது, ஆதாம் பழியை ஏவாள் பேரில் சுமத்த, ஏவாள் தனது செயலுக்குக் காரணம் பாம்புதான் என்று கூறி, பழியை பாம்பின் மேல் போட்டாள். பின்பு தேவன், அவர்களுடைய செயல்களுக்காக அவர்களையும், பாம்பையும் அடுத்தடுத்து சபித்தார். தேவனின் வாக்குப் பிரகாரம், அன்றைய தினமே ஆதாமும் ஏவாளும் ஆவியில் மரித்தனர். ஏதேன் தோட்டத்தை விட்டும், ஜீவ விருட்சத்தினின்றும் விரட்டப்பட்டனர். வாழ்வின் சகல துன்பங்களையும் அனுபவித்து, கடின உழைப்பின் பேரில் உணவைத் தேடவும், இறுதியில் சரீர மரணத்தையும் அடைவேண்டியவர்களாயினர். தேவன் தமது வாக்கை நிறைவேற்றுவார் என அவர்கள் நம்பவில்லை. ஆனால் அதுதான் நடந்தது. அவர்களுடைய சந்தேகத்திற்கும் அவிசுவாசத்திற்கும் அவர்கள் மிகப் பெரிய விலை கொடுக்க வேண்டியாதாயிற்று.

மனிதன் மிகவும் கெட்டுப் போனான்; அவனுடைய இதயத்தின் எண்ணங்கள் ஒவ்வொன்றும் தொடர்ந்து கெட்டவைகளாகவே இருந்தது என ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம்.

தேவனை இது மிகவும் வேதனையளிக்கச் செய்தது. மனிதனை உண்டாக்கியதற்காக அவர் வருத்தப்படவும் செய்தார். அதாவது, மனிதன் இத்தகைய கீழ்நிலைக்குத் தாழ்ந்து விட்டதால், அவனை உண்டாக்கியதற்காக அவர் வருந்தினார். மனிதன் கெட்டுப் போனதால், பூமியிலிருந்து மனிதனை அறவே அழித்திட ஒரு வெள்ளத்தை அனுப்ப தேவன் தீர்மானித்தார். "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" (ஆதி. 6 : 8) என வேதாகமம் கூறுகிறது. நோவா, அவருடைய மனைவி, மூன்று மகன்கள், அவர்களுடைய மனைவிமார்கள், ஆகிய எட்டு பேரையும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மிருக ஜீவன்களையும் மட்டும் வெள்ளத்தின் அபாயத்திலிருந்து விடுவித்து, பூமியை மீண்டும் பலுகச் செய்ய தேவன் நோவாவைத் தேர்ந்தெடுத்தார் என அக்கதை தொடர்கிறது.

ஒரு பேழையைக் கட்ட நோவாவுக்கு அவர் கட்டளையிட்டார். அதைக் கட்ட வேண்டிய விவரங்கள் அனைத்தையும் கொடுத்து, எப்போது அதைக் கட்ட வேண்டுமென்றும், மக்களை எப்போது எச்சரிக்க வேண்டுமென்றும் தேவன் கூறியிருந்தார். என்றாலும், ஒருவரும் நோவாவுக்குச் செவி சாய்க்கவில்லை. ஒரு வேளை அவனுக்குப் பைத்தியம் பிடித்து உளறுவதாக அவர்கள் நினைத்திருக்கக் கூடும். ஒரு போதுமே மழை பெய்ததில்லை; வெள்ளம் எங்கிருந்து வரக்கூடும்? என்றெல்லாம் அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த போதிலும், அந்த நாள் வரத்தான் செய்தது. நோவா, அவன் குடும்பம், மிருகங்கள் அனைத்தையும் பேழைக்குள் பிரவேசிக்க தேவன் உத்தரவிட்டார். பின்னர், பேழையின் கதவு உறுதியாக சாத்தப்பட்டது. பின், மழை பெய்யத் தொடங்கிற்று, பெய்து கொண்டே இருந்தது. நாட்கணக்கில், வாரக்கணக்கில் மழை பெய்தது. வெளியில் இருந்தவர்கள் அனைவரும் நம்பிக்கை இழந்தனர். எனவே, கெட்டவர்கள் அனைவரும் அழிக்கப் பட்டனர். காலம் கடந்து போகும்வரை, இப்படி நடக்குமா என அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டேயிருந்தனர். தேவன், "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டு பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார்" என்பதாக பேதுரு கூறுகிறார். (2 பேதுரு 2 : 5). எனவே, தேவன் தமது வாக்கைக் காப்பாற்றினார்.

அடுத்து நாம் கூறப்போகும் கதை ஆதியாகமம் 18, 19 அதிகாரங்களில் காணப்படும் சோதோம், கொமோரா என்னும் கெட்டுப்போன இரு நகரங்களின் அழிவைப் பற்றியது.ஆபிரகாமும் அவனுடைய மந்தையை மேய்ப்பவர்களும், லோத்தும் அவனுடைய மந்தையை

மேய்ப்பவர்களும் பிரிந்து சென்றனர். அப்போது, தனக்குத் தேவையான நிலத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள லோத்துக்கு ஆபிரகாம் கூறியதாக வசனங்கள் சொல்லுகின்றன. லோத்தும், அவன் குடும்பமும் மற்றும் அவனோடு உள்ளவர்கள் அனைவரும் சோதோமை நோக்கிச் சென்றனர். அவர்கள் செய்த மாபெரும் தவறு அது. இறுதியாக, அவர்கள் சோதோமை அடைந்தனர். ஆனால் சோதோமும் கொமோராவும் கெட்டுப் போன நகரங்களாக இருந்தன. அவைகள் எவ்வளவு கெட்டுப் போயிருந்தனவென்றால், தேவன் அந்நகரங்கள் இரண்டையும் அழித்துப் போட முடிவு செய்திருப்பார். இதை அறிய வந்த ஆபிரகாம், லோத்தும் சோதோமில் இருப்பதைக் கண்டு, அவர்களை அழிக்காமல் விட்டு விட தேவனிடம் மன்றாடுகிறான். ஐம்பது நல்லவர்கள் அங்கு வசிப்பின், அவர்களைத் தேவன் காப்பாற்றுவாரா என ஆபிரகாம் வினவ, தேவன் சம்மதிக்கிறார். என்றாலும் அத்தனை நல்லவர்கள் அங்கு இல்லாதிருப்பதை அறிந்த ஆபிரகாம் 45, 40 என்று எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டே 10 பேர் வரை வருகிறார். ஒவ்வொரு முறையும் தேவன் அந்நகரங்களை காப்பாற்றுவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் பரிதாபம்! பத்து நல்லவர்கள் கூட அங்கு தேறவில்லை. பின், தேவனின் தூதர்கள் இருவர் சோதோமில் லோத்தைச் சந்தித்து, அவனும், அவனுடைய குடும்பம், மற்றும் அவனைச் சார்ந்தவர்கள் அனைவரும் காப்பாற்றப்பட வேண்டி, உடனே நகரத்தை விட்டு வெளிச் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றனர். லோத்துக்கும் அவன் மனைவிக்கும் மணமாகாத இரு பெண் மக்களும், மணமான சில பெண் மக்களும் குடும்பத்தோடு அவர்களிடம் வசித்து வந்தனர். அவர்களை அணுகி, நகரத்தை விட்டு வெளியே செல்லக் கேட்டபோது, லோத்தின் மருமகன்கள் போக மறுத்துவிட்டனர். இறுதியாக, பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் லோத்தும், அவன் மனைவியும், மணமாகாத இரு பெண் மக்களும் சோதோமை விட்டு வெளியேறிச் சென்றனர். லோத்தின் மனைவிக்கு சோதனை வந்தது. நகரங்களின் அழிவைக் காண விரும்பினாள்; திரும்பினாள். விளைவாக, உப்புத்தூணாக மாறி நின்றாள். பல ஆண்டுகளுக்குப் பின்னர், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு பேதுரு எழுதினார்: "சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளை திருஷ்டாந்தமாக வைத்து; . . . நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை . . ." தேவன் இரட்சித்தார். (2 பேதுரு 2 : 6, 8). ஆக, மீண்டும் சந்தேகமும்

அவிசுவாசமும் தலைதூக்கி, உண்மையிலேயே தேவன் அந்நக ரங்களை அழிப்பார் என்பதை விசுவாசிக்க மறுத்து, லோத்தின் குடும் பத்தில் சிலர், ஏன் லோத்தின் மனைவியே கூட அழிந்து போக வேண்டியதாயிற்று. (ஆதி. 19 : 26). தேவன் தமது வார்த்தையைக் காப்பாற்றுகிறார் என்பதைக் கடினமான வழியில் காண வேண்டியவர் களாயிருந்தனர்.

இப்போது, அடுத்த காட்சி ஒன்றை கலிலேயா கடற்கரையில் காண்கிறோம். இயேசுவும் அவருடைய சீடர்களும் கடலின் மறுபக்க முள்ள மலையின் மேல் தனித்து ஜெபம் செய்வதற்காக செல்லுகி றார்கள். மாலை வேளையில், கடல் கொந்தளித்து, பலமாகக் காற்றடித்து படகு தண்ணீரில் மூழ்கும் நிலைக்கு வந்துவிட்டது. பின்னர் நாம் படிக் கிறோம்: "இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின் மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின் மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறி னார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி : திடன் கொள்ளுங்கள், நான் தான், பயப்படாதிருங்கள் என்றார். பேதுரு அவரை நோக்கி : ஆண்டவரே ! நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வரக்கட்டளையிடும் என்றான். அதற்கு அவர் : வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினி டத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாக இருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்து போகையில் ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து : அற்ப விசுவாசியே! ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படகில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது படகில் உள்ளவர்கள் வந்து; மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்து கொண்டார்கள். "(மத். 14 : 25 - 33), இப்போது, பேதுரு தண்ணீரில் ஏன் மூழ்கப் போனான்? இயேசு விடம் செல்ல, அவன் ஏற்கனவே தண்ணீரின் மேல் நடந்து கொண்டி ருந்தான். அவன் உண்மையிலேயே என்ன செய்து கொண்டிருந்தான் என்பதைச் சிந்தித்துப் பார்க்க, ஆரம்பத்தில் நேரமின்றி அவன் நடந்து கொண்டிருந்தான். ஆனால் இயேசு அவனை நோக்கி வா என்று கூப்பிட்ட வேளையில், அவன் சிந்திக்கத் தொடங்கினான். அலைக ளையும், பெருங்காற்றையும் திடீரெனக் கண்டதும் "தண்ணீரில் மேல் நான் எப்படி நடக்க முடியும்?" என சந்தேகம், அவிசுவாசம் அடுக்க டுக்காக வந்து அவனை தண்ணீருக்குள் அமுக்கிப் போட்டன. அவன் சந்தேகப்படாதிருந்தால், தொடர்ந்து அவன் தண்ணீரின் மேல் நடந்து போயிருப்பான். நாம் செய்யத் திட்டமிட்ட காரியங்கள் பலவற்றை எத்தனை முறை சந்தேகங்கள் தலையிட்டு தடுத்துப் போட்டிருக்கின்றன. ஆனால், இயேசு உடனே கூறினார்: " அற்ப விசுவாசியே, ஏன் சந்தே கப்பட்டாய்?"

(தொடரும்)

## யெகோவா சாட்சிகள் - 11

# நரகத்தை மறுதலிக்கும் கூட்டத்தார்.

நரகம் என்று ஒன்று இருப்பது உண்மையல்ல என யெகோவா சாட்சியினர் நம்பவும், போதிக்கவும் செய்கின்றனர். அவர்கள் கூறுவதாவது :

1) நரகம் இருப்பதாக போதிப்பது முற்றிலும் வசனத்துக்குப் புறம்பானது.

2) நியாயமற்றது.

3) தேவனுடைய அன்புக்கு முரணானது.

4) அது நீதிக்கு ஒவ்வாதது.

நமது கடந்த இதழ்களில் மனிதனுக்கு ஆத்துமா இருப்பதாகவும், மரணத்திற்குப்பின் அது நரகத்திலோ அல்லது பரலோகத்திலோ நித்தியத்தைக் கழிக்கிறது என்றும் பார்த்தோம். தேவன் பரிசுத்தராய் இருப்பதால், மனிதனுக்குள் இருக்கும் பாவம் தண்டிக்கப்பட வேண்டும். மனிதர்களின் பாவத்துக்காக இயேசு பாவமானார். அவர் பாவத்திற்காக செலுத்திய தண்டனையை குறைத்து மதிப்பிடுவோமாகில், கல்வாரியில் அவர் செலுத்திய கிரயத்தையும் குறைத்தே மதிப்பிடுவோம். வேதாகமம் தேவனுடைய வசனம் என நாம் விசுவாசிப்பதால் நரகத்தையும் விசுவாசிக்கிறோம்.

தேவன் அனைத்து மனிதர்களையும் அன்பு செலுத்தி இரட்சிக்கிறார் என்றும், கிறிஸ்து இதற்காகவே எல்லாருக்காகவும் மரித்தார் என்பதையும் நாம் உறுதியாகவும் அறிவோம். ஆனால் தேவன் மனிதனுடைய சித்தத்திற்கு அப்பால் மனிதர்களை இரட்சிப்பதில்லை. மனிதர் இயேசுவினிடத்தில் வரவும், தேவனுடைய இரட்சண்ய கிருபையின் ஈவைப் பெறவும் மறுக்கும்போது தேவன் அவர்களை இரட்சிக்க மாட்டார். இரட்சிக்கவும் இயலாது. கலாத்தியர் 6 : 7-8-ல் இப்படியாகக் கூறுகிறார்: "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்." (கலா. 6 : 7, 8)

இரண்டு நபர்களை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்வோம். ஒருவன் தீமையினால் நிறைந்து, எல்லாக் குற்றங்களையும் உடையவனாகி, தனது வெட்கக் கேடான பாவத்தில் பெருமை பாராட்டுகிறான். அவன் அருவருப்பானவனும், துஷ்டனும், இழிவானவனுமாயிருக்கிறான். அவன் மதுபான பிரியனும், கொலைகாரனும், அனைத்து வேசித்தன அருவருப்பையும் நடப்பிக்கிறான். அவன்

தேவதூஷணம் பேசி, தேவனுடைய வசனத்தை பரிகசிக்கிறான். இப்படிப்பட்ட மனிதனை நமது பரிசுத்த தேவன் தண்டியாமல் விட்டுவிடுவார் என்று சொல்லலாமா?

மறுபுறம் பார்த்தால் மற்றொருவன் பாவியாயிருந்து, இயேசுவை விசுவாசித்து, பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, தண்ணீர் ஞானஸ்நானத்திலே முழுக்கப்பட்டவனாகிறான். நித்திய ஜீவனையும் அடைகிறான். முந்தின மனிதனை விட தேவன் இவனையே நேசித்தார் என்று நாம் சொல்லலாமா? இல்லை!

தேவன் இருவரையும் நேசிக்கிறார். இரண்டாமவன் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டான். அனைத்து மனித வர்க்கத்திற்கும் இது உண்மை தேவன் எல்லாரையும் நேசிக்கிறார், மனிதனோ தனது விதியை நிர்ணயித்துக் கொள்கிறான்.

நரகத்தைக் குறித்து வேதாகமம் தெளிவான போதனையை கொண்டுள்ளது.

உபா, 32 : 22 - "என் கோபத்தினால் அக்கினி பற்றிக் கொண்டது. அது தாழ்ந்த நரகமட்டும் எரியும்"

யோபு. 26 : 6 - "அவருக்கு முன்பாகப் பாதாளம் வெளியாய்த் திறந்திருக்கிறது. நரகம் மூடப்படாதிருக்கிறது."

நீதி. 27 : 20 - "பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை."

சங். 55 : 15 - "மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக, அவர்கள் உயிரோடே பாதாளத்தில் (நரகத்தில்) இறங்குவார்களாக."

ஏசா. 5 : 14 - " அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது."

லூக்கா. 16 : 22, 23 - "- ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே (நரகத்திலே) அவன் வேதனைப்படுகிற போது."

மத்தேயு. 25 : 45 , 46 - " . . . சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்."

இந்த வசனங்களைக் காட்டிலும் தெளிவானவைகளை எதிர்பார்க்கலாமா? நரகத்தையும் அது இருப்பதன் உண்மையையும் கிறிஸ்து கூறியிருப்பது பொய்யா? அல்லது அவர் தவறில் நேர்மையாயிருந்தார் என்று சொல்லலாமா? நரகம் இருப்பது உண்மையென்ற முடிவுக்குத் தான் நாம் வருகிறோம். வரவேண்டும்.

வாசகரே, வஞ்சிக்கப்படாதிருங்கள்!

(தொடரும் . . . .)

E.A. ஆறுமுகம்
திண்டுக்கல்

# முதிர்ச்சியின் அடையாளங்கள்

ஒரு கிறிஸ்தவனாக இருக்கும் நான் வளர்ச்சி அடைய கடமைப் பட்டவன். தமது இரண்டாவது நிருபத்தை, பேதுரு ஒரு கட்டளையுடன் முடிக்கிறார்: "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் . . ." (2 பேதுரு 3 : 18) விசுவாசத்தில் முதிர்ச்சி அடையும் வழியில் செல்லத் தவறிய கொரிந்து சபையை பவுல் கண்டிக்கிறார். (1 கொரி. 3 : 1 - 3) ஆவியிலும் ஞானத்திலும் வளர்ச்சியடையாத எபிரேய கிறிஸ்தவர்கள் கண்டிக்கப்பட்டனர். (எபிரேயர் 5 : 12 - 14)

ஆவியிலும் ஞானத்திலும் வளராவிட்டால் தேவனை பிரியப்படுத்த முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்படியான வளர்ச்சி அல்லது வளராத நிலை நமது வாழ்க்கையில் தெளிவாக அறியப்படுகிறது. கீழே காணும் கிறிஸ்தவனுக்குரிய முதிர்ச்சியின் அடையாளங்கள் பலருக்கும் பயனுள்ளவைகளாக இருக்கும் :

- பலாத்காரம் அல்லது அழிவு எதுவுமின்றி கோபத்தைக் கட்டுப்படுத்தி அபிப்பிராய பேதங்களை சீராக்கும் திறன் (ஆதி. 13)
- பொறுமை : நீண்ட கால பயனடைய, உடனடி மகிழ்ச்சியை தியாகம் செய்ய விரும்புவது (எபி. 11: 24 - 26)
- விடா முயற்சி : பலத்த எதிர்ப்புகளையும், அதைரியப்படுத்தும் பின்னடைவுகளையும் மீறி, எடுத்துக் கொண்ட நிலையில் அல்லது காரியத்தில் தொடரக் கூடிய திறமை. (1 கொரி. 15: 58).
- குறை எதுவும் கூறாமல் அல்லது வீழ்ந்து போகாமல், வெறுப்பு, ஏமாற்றம், நிம்மதியின்மை, தோல்வி ஆகியவற்றை எதிர்கொள்ளும் திறன். (கலா. 6 : 9)
- அடக்கம் : "நான் தவறு செய்தேன்" எனச் சொல்லக்கூடிய பெருந்தன்மையுடனிருப்பதும், ஒரு காரியத்தை சரியாக செய்யும் போது முதிர்ச்சியுற்ற மனிதன் "நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?" எனக் கூறி திருப்தி அடையத் தேவையற்றிருப்பதும் அடக்க குணமாகும். (லூக்கா 15 : 11 - 32 நீதி மொழிகள் 27 : 2)
- காலம் முழுவதும் புதுப்புதுக் காரியங்களை கண்டு பிடிப்பதிலேயே கழித்து விட்டு இறுதியில் எதையும் கண்டுபிடிக்காத முதிர்ச்சி அடையா மனிதர்கள் வாழும் இவ்வுலகில், ஒரு முடிவு எடுத்து அதன் படி நடக்கும் திறன் படைத் குணம் (யாக்கோபு 1 : 22 - 25)

விசுவாசத்தில் நீங்கள் முதிர்ச்சி அடைந்தவரா? மேற் சொன்னவைகள் உங்களுக்கு சம்பந்தப்பட்டவைகளா? இல்லையெனில் இன்றே விசுவாசத்தைக் காத்துக் கொள்ளும் ஆரம்ப இடமாகிய - வசனத்தில் முதிர்ச்சி பெற்று, இறுதியில் உங்கள் விசுவாசத்தில் முதிர்ச்சி அடையும் வழியை நாடுங்கள்.

Ronnie Low

எஸ்.எஸ். ராஜன்

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, FEBR 1995
FEBR THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undellvored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST